தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நாலாட்டின்புத்தூர் அருகே மின்னல் பாய்ந்து விவசாயி சாவு**

First Published : 27 Apr 2010 03:28:43 AM IST

கோவில்பட்டி, ஏப். 26: தூத்துக்குடி மாவட்டம், நாலாட்டின்புத்தூர் அருகே திங்கள்கிழமை மின்னல் பாய்ந்து விவசாயி இறந்தார்.

நாலாட்டின்புத்தூர் பட்டறை பஸ் நிறுத்தத்தைச் சேர்ந்த கருப்பையா மகன் செல்லத்துரை (52). இவருக்கு சொந்தமான தோட்டம் கோவில்பட்டி-திருநெல்வேலி புறவழிச் சாலையில் நாலாட்டின்புத்தூர் அருகே உள்ளது.

தோட்டத்தில் மல்லிகைப் பூவை பறித்துக் கொண்டிருந்த போது, லேசான மழை பெய்யத் துவங்கியதையடுத்து, அவர் தோட்டத்திலுள்ள கொய்யா மரத்தடியில் நின்று கொண்டிருந்தாராம். அப்போது மின்னல் பாய்ந்ததில் செல்லத்துரை சம்பவ இடத்திலேயே இறந்தார். நாலாட்டின்புத்தூர் காவல் நிலைய போலீஸôர் வழக்குப் பதிந்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆடுகள் பலி: நாலாட்டின்புத்தூர் வி.பி.சிந்தன் நகரைச் சேர்ந்தவர் முத்தையா மகன் முத்துசாமி (45). ஆடு மேய்க்கும் தொழில் செய்து வரும் இவர், தனது ஆடுகளை நாலாட்டின்புத்தூர் பகுதியிலுள்ள மலை அடிவாரத்தில் மேய்த்துக் கொண்டிருந்தாராம். அப்போது மின்னல் பாய்ந்ததில் 15 ஆடுகள் இறந்தன.

**எடைப்பணி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்: விவசாயிகள் பரிதவிப்பு**

First Published : 27 Apr 2010 01:30:48 AM IST

திருக்கோவிலூர், ஏப். 26: பணி நிரந்தரம் உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக்கூட எடைப்பணித் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் திங்கள்கிழமை தமிழகம் தழுவிய தொடர் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இப் போராட்டத்தால் விவசாயிகள் பரிதவிப்புக்கு ஆளாகினர்.

÷திருக்கோவிலூர் பகுதியில் அரகண்டநல்லூர், மணலூர்பேட்டை மற்றும் சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் எடைப்பணித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

÷இந்நிலையில் அரகண்டநல்லூருக்கு சுமார் 2000 மூட்டையும், மணலூர்பேட்டைக்கு சுமார் 500 மூட்டையும், சங்கராபுரத்துக்கு சுமார் 1000 மூட்டையும் விவசாயிகள் நெல் கொண்டுவந்தனர். தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் ஒருசில விவசாயிகள் தங்களது நெல் மூட்டைகளை திருப்பி எடுத்துச் சென்றனர். ஆனால் பெரும்பாலான விவசாயிகள் தங்களது விளைப் பொருள்களை வெளியே எடுத்துச் செல்ல வழியின்றி பரிதவித்து நின்றனர்.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு 100-க்கும் மேற்பட்ட சுற்றுப்புற கிராமங்களின் விவசாயிகள் தங்கள் விளைவித்த நெல், மக்காச்சோளம் உள்ளிட்ட பொருள்களை திங்கள்கிழமை அதிகாலை முதல் மாட்டுவண்டி, டிராக்டர், மினி டெம்போ மற்றும் பேருந்துகளில் கொண்டு வந்தனர்.

÷இந்நிலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள எடைப்போடும் பணியாளர்கள் 30 பேர், கிளைத் தலைவர் ஜி.கண்ணன் தலைமையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

÷இதனால் விளை பொருள்களுடன் வந்த விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். இதைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி - கச்சிராயப்பாளையம் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். இதனால் சுமார் 20 நிமிடம் போக்குவரத்து தடைப்பட்டது.

தகவல் அறிந்து கள்ளக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் பா.ரஜினிகாந்த், ஞா.விஜி, அப்துல் ஷபியுல்லா ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் விவசாயிகளிடம் பேசி மறியலை கைவிடச் செய்தனர்.

உளுந்தூர்பேட்டை

உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தின் எதிரே எடைப்பணி தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொண்டனர்.

÷சங்கத்தின் உளுந்தூர்பேட்டை கிளைத் தலைவர் எம்.கொளஞ்சி தலைமையில் செயலாளர் கே.ராஜேந்திரன், துணைத் தலைவர் ஜெயசங்கர் உள்பட 45 பேர் இப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

**நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்க கோரி முதல்வருக்கு மனு**

First Published : 27 Apr 2010 03:23:48 AM IST

களியக்காவிளை, ஏப். 26: குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்க நீராதாரங்களைத் தூர்வாரி, அவற்றில் தேங்கும் மழைநீரால் நிலத்தடி நீர்

மட்டத்தைப் பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு கவுன்சில் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அதன் பொதுச் செயலர் பாஸ்டர் ஜெ. எலியாசர், தமிழக முதல்வருக்கு அனுப்பிய மனு:

சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கோடை வெப்பம் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால், மக்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

எனவே கோடைக்காலத்தில் மாவட்டத்தில் உள்ள குளங்கள், அணைகளைத் தூர்வாரி ஆழப்படுத்தி, அதில் அதிகளவு மழை நீரைச் சேமித்து நிலத்தடி நீர்மட்டத்தைப் பாதுகாக்கவும், குடிநீர்ப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**கடும் வெயிலால் விளைச்சல் குறைவு : தக்காளி விலை தாறுமாறாக உயர்வு**

கோயம்பேடு : கடும் வெயிலால் விளைச்சல் குறைந்து, தக்காளி கடும் விலையேற்றம் கண்டுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் இருந்து தக்காளி வரத்து இருக்கிறது. கடந்த மூன்று மாதமாக 70 லாரி தக்காளி வரத்து இருந்தது. கடும் வெயிலால் தக்காளி விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், தினமும் 50 லாரி தக்காளி மட்டுமே மார்க்கெட்டிற்கு வரத்து உள்ளது.

கடந்த மூன்று மாதமாக, கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி 4 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கிலோ தக்காளி 16 ரூபாய் முதல் 18 வரை விற்கப்படுகிறது. இது குறித்து, கோயம்பேடு தக்காளி வியாபாரிகள் சங்கத்தலைவர் தியாகராஜன் கூறியதாவது: கடந்த மூன்று மாதமாக தக்காளி விலை குறைவாக இருந்ததால், தக்காளி பயிரிட்ட விவசாயிகள் நஷ்டமடைந்தனர். வசதியான பெரிய விவசாயிகள் சிலர், துணிச்சலாக தக்காளியை பயிரிட்டனர். தற்போது கடும் வெயிலால் விளைச்சல் குறைந்து விட்டது. அதனால், முன்பு இருந்ததை விட, பல மடங்கு விலை எகிறி விட்டது. இவ்வாறு தியாகராஜன் கூறினார்.

**உழவர் சந்தையில் சின்னவெங்காயம் கிலோ ரூ.12**

அரியலூர் : அரியலூரில் சின்ன வெங்காயம் கிலோ ரூ. 12க்கு விற்கப்படுகிறது.

அரியலூர் உழவர் சந்தையை மேம்படுத்தும் வகையில், வேளாண் துணை இயக்குனர் சிவசங்கர் அறிவுரைப்படி பல்வேறு கிராமங்களில் விவசாயிகளை சந்தித்து இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக உழவர் சந்தையில் காய்கறிகளை விற்பனை செய்ய கேட்டு கொள்ளப்பட்டது. இதையடுத்து வெளிமார்க்கெட்டை விட குறைந்த விலையில் அரியலூர் உழவர் சந்தையில் சின்ன வெங்காயம் கிலோ ரூ.12க்கு விற்கப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என உழவர் சந்தை நிர்வாக அலுவலர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

**பருத்தி சாகுபடி கருத்தரங்கு**

தர்மபுரி: நல்லம்பள்ளி யூனியன் லளிகம் கிராமத்தில் மான்சாண்டோ நிறுவனம் சார்பில் போல்கார்டு -2 பருத்தி சாகுபடி குறித்த கருத்தரங்கு நடந்தது. மண்டல உறுப்பினர் வடிவேல் தலைமை வகித்தார். மான்சாண்டோ நிறுவன மேலாளர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். பருத்தி சாகுபடி மூலம் அதிக லாபம் பெறும் முறைகள் குறித்து விளக்கப்பட்டது. பல்வேறு கிராமங்களில் இருந்து திரளான விவசாயிகள் கலந்து கொண்டு பருத்தி சாகுபடி குறித்த சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

**வேளாண் கூட்டுறவு வங்கியில் முகாம்**

ஈரோடு: ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சார்பில் உறுப்பினர் கல்வித்திட்ட முகாம் பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நடந்தது. முகாமில் கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் சோமகாந்தன், உறுப்பினர்களின் கடமை, பொறுப்பு, கூட்டுப்பொறுப்பு, பொதுசேவை, அக்ரி கிளினிக் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு சங்கம் சார்பில் அளிக்கப்படும் சேவை குறித்து கூறினார். நடராஜன் சத்தியராஜ், குழு ஊக்குனர் மணிமேகலை பேசினர். முகாமில் அகர்வால் கண்மருத்துவமனை சார்பில் கண்பரிசோதனை முகாம் நடந்தது. இதில் 56 உறுப்பினர்கள் பயனடைந்தனர். சங்க செயலாளர் சதாசிவம் வரவேற்றார். சங்க எழுத்தர் ஜோதி நன்றி கூறினார்.

**சூரிய சக்தியில் தண்ணீரை சூடாக்கலாம்இன்ஜி., கல்லூரி மாணவர்கள் சாதனை**

மார்த்தாண்டம்: பழுதடைந்த டியூப் லைட்களைப் பயன்படுத்தி சூரியசக்தி மூலம் தண்ணீர் சூடாக்கும் நவீன கருவியை மஞ்சாலுமூடு நாராயணகுரு இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
மஞ்சாலுமூடு நாராயணகுரு இன்ஜினியரிங் கல்லூரியில் எலெக்ராணிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் பாடப்பிரிவு மாணவர்கள் பிபின்குமார், அருண், தர்ஷன் ஆகியோர் சூரியசக்தி மூலம் தண்ணீரை சூடாக்கும் முறையை கண்டுபிடித்துள்ளனர். இதற்காக இவர்கள் பழுதடைந்த டியூப் லைட்டுகளை பயன்படுத்தினர்.பெரிய டியூப்பிற்குள் சிறிய டியூப்புகளை செலுத்தி அதில் கறுப்பு வர்ணம் பூசினர். அதன் பின்னர் பெரிய டியூப்பின் இடைவெளியில் மீதேன் வாயுவை நிரப்பினர்.

இப்படி பத்து செட் டியூப்புகளை ஒன்றாக இணைத்து ஒரு பலகையில் பொருத்தினர். பின்னர் சிறிய டியூப்கள் வழியாக தண்ணீர் செலுத்தி மைக்ரோ கண்ரோலர் மூலம் கட்டுப்படுத்தினர்.பின்னர் இதனை திறந்த வெளியில் வைக்கும் போது சூரிய ஒளி எத்திசையில் கிடைக்கிறதோ அத்திசையில் இப்பலகை தானாக இயங்கும். இதன்மூலம் கிடைக்கும் மின்சக்தியினால் தினமும் ஒரு சாதாரண குடும்பத்திற்குத் தேவையான தண்ணீரை சூடாக்க முடியும் என

அம்மாணவர்கள் தெரிவித்தனர்.கல்லூரி சேர்மன் சித்தார்த்தன், எலக்ட்ராணிக் அண்ட் கம்யூனிகேஷன் துறைத்தலைவர் வின்சிலி மற்றும் பேராசிரியர்கள் முன்னிலையில் கல்லூரி வளாகத்தில் வைத்து செய்முறை விளக்கம் அளித்தனர்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ம் தேதி நடக்கிறது.
இதுகுறித்து கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ம் தேதி காலை 11 மணிக்கு கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது.
அனைத்து துறை மாவட்ட உயர் அதிகாரிகளும் கலந்துகொள்கின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ஊடுபயிராக கிராம்பு:விவசாயிகள் ஆர்வம்**

கூடலூர் : கூடலூர் பகுதி தேயிலைத் தோட்டங்களில் ஊடுபயிராக கிராம்பு பயிரிடுவது அதிகரித்துள்ளது. வாசனைப் பயிர்களில் கிராம்புக்கு தனியிடம் உண்டு.  தகுந்த மண்வளம் மற்றும் காலநிலை இருக்கும் பகுதிகளில் மட்டுமே வளரும் கிராம்பு, ஆயுர்வேத மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.
நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஏற்ற சூழ்நிலை உள்ளதால், தேயிலைத் தோட்டங்கள் இடையே ஊடுபயிராக பயிரிட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.  குறிப்பாக, ஓவேலி பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மலர்கள் மலரும் முன்னும், மலர்ந்த பின்னும் என இரு வகைகளில் அறுவடை செய்யப்படுகிறது. கடந்தாண்டு பெய்த பருவமழையால், தற்போது நல்ல மகசூல் கிடைத்திருப்பதும், இங்கு உற்பத்தி செய்யப்படும் கிராம்புக்கு, வெளிமார்க்கெட்டில்  நல்ல கிராக்கியுள்ளதாலும் விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஊடு பயிராக கிராம்பு செடிகளை நடவு செய்ய, அரசு ஊக்கப்படுத்தினால், இப்பகுதியில் கிராம்பின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும்.

**ரூ. 2,500 கோடி பயிர்க்கடன்**

சிங்கம்புணரி : தொடக்க கூட்டுறவு சங்க கடன் வழங்கும் விழா, சிங்கம்புணரியில் நடந்தது. மாநில கூட்டுறவு சங்க தனி அலுவலர் தமிழரசன் தலைமை வகித்தார். தனி அலுவலர் காளிமுத்து வரவேற்றார்.

விவசாயிகள், மகளிர் குழுவிற்கு கடன், மண்பரிசோதனை சான்று வழங்கப்பட்டது. தமிழரசன் பேசுகையில், "உணவு உற்பத்திக்கு கூட்டுறவு துறை பல திட்டங்களை செயல்படுத்துகிறது. கடந்த ஆண்டு பயிர்க்கடன் 2,169 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 2, 500 கோடி வழங்கப்படும். தவணை காலத்திற்குள் திருப்பி செலுத்தும் விவசாயிக்கு, வட்டி இல்லை. சொட்டு நீர் பாசனத்திற்கு 100 கோடி கடன் வழங்கப் பட்டுள்ளது. தேவையான அளவு கடன் வழங்க தயாராக உள்ளோம். தமிழகத்தில் தலா 150 விவசாய சேவை மையம், விவசய கிளினிக், 137 பொது தகவல் மையங் கள் துவக்கப் பட்டுள்ளன. கடந்த ஆண்டு, பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் 650 கோடி வழங்கப் பட்டுள்ளது," என்றார்.

வங்கி செயலாளர் தமிழ்மாறன் நன்றி கூறினார். இணை பதிவாளர் ஜெயம், துணை பதிவாளர் பால்வடிவு, மத்திய வங்கி பொது மேலாளர் சந்தானகிருஷ்ணன் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

திருப்புத்தூர் : பிள்ளையார்பட்டி, பஞ்சாப் நேஷனல் வங்கி பயிற்சி நிலையத்தில், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண் உதவி இயக்குனர் முத்து எழில் துவக்கி வைத்தார். நிலைய இயக்குனர் குணசேகரன், வேளாண் விற்பனை துறை அலுவலர் குப்புசாமி, செம்மை நெல்சாகுபடி, பயிர் நிர்வாகம், அறுவடை, தரம் பிரித்தல், சேமித்தல், சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சி அளித்தனர். வேளாண் உதவி அலுவலர் ராசு நன்றி கூறினார்.

**பாசன வாய்க்கால் தூர்வார பா.ம.க., கோரிக்கை**

பாபநாசம்: பாபநாசம் பாட்டாளி மக்கள் கட்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம் தமிழக முதல்வரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான கருணாதிக்கு அனுப்பிய கோரிக்கை மனுவில் அவர் கூறியதாவது: மேட்டூர் அணையில் இருந்து குறுவை பாசனத்துக்காக தண்ணீர் திறக்க இன்னும் ஒன்றரை மாதங்களே உள்ள லையில் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றின் பாசன வாய்கால்கள் மற்றும் வடிகால்கள் தூர்வாரப்படாமல் நெய்வேலி காட்டாமணக்கு மற்றும் செடிகள், புதர்கள் மண்டிக் கிடக்கிறது.

குறிப்பாக, 2005 - 08ம் ஆண்டு வெள்ள பெருக்கின்போது பல கிராமங்களை தண்ணீர் முழ்கடித்தது. பழைய மண்ணியாறு தூர்வாராப்பட்டு ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதனால், இந்த ஆற்றில் தண்ணீர் வேகமாக செல்ல முடியாமல் கிராமங்களுக்குள் புகுந்து விடும் அபாயம் தொடர்கிறது.எனவே, மேட்டூர் அணையில் இருந்த தண்ணீர் திறப்பதற்கு முன் காவிரி, கொள்ளிடம் ஆற்றின் பாசன வாய்கால்கள் மற்றும் வடிகால்களை முழுமையாக தூர்வார வேண்டும். இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

**மழை வேண்டி விவசாயிகள் சிறப்பு பூஜை**

தேவதானப்பட்டி : பொம்மிநாயக்கன்பட்டியில் விவசாயிகள், பொது மக்கள் சார்பில் மழை வேண்டி சிறப்பு பூஜை நடந்தது.

பெரியகுளம் ஒன்றியம், பொம்மிநாயக்கன்பட்டியில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. வராகநதியில் வரும் நீர் வாய்க் கால் மூலம் கொண்டு சென்று சிறுகுளம் கண் மாய் நிரப்பப்படுகிறது. கண்மயில் தேங்கும் நீரும், இதனை சார்ந்துள்ள விவசாய கிணறுகளில் கிடைக்கும் நீர் ஆதாரமாக கொண்டு விவசாயப் பணிகள் நடந்து வருகிறது. தொடர் மழை இல்லாததால் கண்மாய் வறண்டு போயுள்ளது.

கண்மாயை நீர் ஆதாரமாக கொண்டுள்ள விவசாய கிணறுகளில் நீர் ஊற்று வற்றிவிட்டது. இதனால் விவசாயப் பணிகள் நடைபெறவில்லை. குறைந்த அளவு கிடைக்கும் நீரைக் கொண்டு செய்யப்படும் விவசாயம் சரிவர விளைச்சல் கிடைக்கவில்லை. விவசாயப்பணிகள் தடைபட்டுள்ளதால் கால்நடைகளுக்கு தீவனம் தட்டுப்பாடும் நிலவி வருகிறது.

இந்நிலையில் கண்மாய் விவசாயிகள், பொதுமக்கள் சார்பில் மழை வேண்டி சிறுகுளம் கண் மாய்க்குள் சிறப்பு பூஜைகள் மற்றும் சிறப்பு தொழுகைகள் நடந்தது. ஊராட்சித்தலைவர் கோபால், ஜமாத் தலைவர் முஸ்தபா, ஆதிதிராவிடர் சமுதாய நாட்டாமை முத்துவீரன், உறவின்முறை தலைவர் மூக்கையா உட் பட பலர் கலந்து கொண்டனர்.

**கோடை வெயில் அதிகரிப்பால் இளநீர் விலை 15 ரூபாயாக உயர்வு**

ஆண்டிபட்டி ஆண்டிபட்டி பகுதியில் இளநீர் கிராக்கியால் விலை 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தேங்காய் விலை மூன்று முதல் 7 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

ஆண்டிபட்டியில் பாலக்கோம்பை, தெப்பம் பட்டி, ராயவேலூர், அழகாபுரி, அணைக்கரைப் பட்டி, புள்ளிமான் கோம்பை, குன்னூர், அரப்படிதேவன்பட்டி, வருஷநாடு, கடமலைக் குண்டு, மயிலாடும்பாறை உட்பட பல மலைக்கிராமங்களிலும், ஆற்றின் கரையோர கிராமங்களிலும் தென்னை சாகுபடி உள்ளது. இப்பகுதியில் உற்பத்தியாகும் இளநீர் மாவட் டத்தின் பல பகுதிகளுக்கும், வெளி மாவட் டங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இளநீர் தேவை ஆண்டு முழுவதும் இருந்தாலும், கோடை காலத்தில் தேவை பல மடங்கு அதிகரித்து விடுகிறது. தற்போது ஆண்டிபட்டி பகுதியில் இளநீர் 10 முதல் 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆனால் மூன்று ரூபாய் முதல் ஏழு ரூபாய் வரை விலை உள்ள தேங்காய்கள் வீதிகளில் விற்பனைக்கு வருகின்றன.

இளநீர் வியாபாரிகள் கூறுகையில், 'வெளியூர்களில் இருந்து வரும் வியாபாரிகள் விவசாயிகளிடம் இளநீர் குலைகளுக்கு முன்கூட்டியே அட்வான்ஸ் கொடுத்து விடுகின்றனர். நகர் பகுதிகளில் தேவைகள் அதிகம் இருப்பதால் அதிக விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர். நகர் பகுதி வியாபாரிகளுடன் போட்டி போட வேண்டி இருப்பதால் விலையை குறைக்க முடியவில்லை' என்றனர்.

**தூத்துக்குடி மார்க்கெட்டில் வாழை இலை,: வாழைத்தார் விலை கிடுகிடு உயர்வு**

தூத்துக்குடி:  தூத்துக்குடி வாழைக்காய் மார்க்கெட்டில் வாழை இலை மற்றும் வாழைத்தார்களின் விலை கிடுகிடுவென உயர்த்துள்ளது. சமீபத்தில் வீசிய சூறாவளி காற்று தான் இந்த திடீர் விலை உயர்வுக்கு காரணம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.
பல ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் வாழை இலை மற்றும் வாழைத்தார் வியாபாரத்தில் தூத்துக்குடி மார்க்கெட் முதல் இடத்தில் இருந்தது. விவசாய கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, தண்ணீர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வாழைப்பயிர் சாகுபடி வெகுவாக குறைந்து வருகிறது. தற்போது தமிழக அளவில் திருச்சி தான் வாழைஇலை மற்றும் வாழைத்தார் வியாபாரத்தில் முதல் இடத்தில் உள்ளது. திருச்சி மாவட்டத்தில் காவிரி கரையோரங்களில் தற்போது வாழைப்பயிர் சாகுபடி அதிக அளவில் நடந்து வருகிறது. தூத்துக்குடி மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக வாழைஇலை மற்றும் வாழைத்தார்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது.
இது குறித்து மார்க்கெட் வியாபாரி ஒருவர் கூறியதாவது; தூத்துக்குடியில் உள்ள வாழை மார்க்கெட்டிற்கு ஆத்தூர், ஏரல், குரும்பூர், ஆறுமுகநேரி, செவத்தையாபுரம், அகரம் மற்றும் பழையகாயல் போன்ற பகுதியில் இருந்து வாழைத்தார் மற்றும் வாழைஇலைகள் விற்பனைக்கு வரும். ஆத்தூர், ஏரல், குரும்பூர் மற்றும் ஆறுமுகநேரி பகுதிளில் அதிக அளவில் கதளி வகை வாழைப்பயிர் சாகுபடி செய்யப்பட்டிருக்கும். அகரம் மற்றும் பழையகாயல் போன்ற பகுதிகளில் நாட்டுவாழை அதிக அளவில் சாகுபடி செய்யப்படும். மேற்கண்ட பகுதிகளில் இருந்தும் மார்க்கெட்டிற்கு சராசரியாக ஆயிரத்து 100 கட்டுகள் வரை வாழை இலை விற்பனைக்கு வரும். ஒரு வாழைக்கட்டில் 200 இலைகள் இருக்கும். இந்த வாழை இலைகள் பெரும்பாலும் கேரளாவில் உள்ள கோழிக்கோடு, திருச்சூர், குருவாயூர், பாலக்காடு, பெருந்தள்மன்னாவிற்கும், கோவை பகுதிக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படும். தற்போது தூத்துக்குடி மார்க்கெட்டிற்கு வாழை இலை கட்டுகளின் வருகை வெகுவாக குறைந்து விட்டது. கடந்த சில நாட்களுக்கு முன்பாக வீசிய சூறாவளி காற்றினால் வாழைப்பயிர்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு சுமார் 800 வாழை இலைக்கட்டுகள் மட்டுமே வருகின்றது. கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக முகூர்த்த நாள் வந்ததால் வாழை இலைகளின் தேவை அதிகரித்தது. இதனால் வாழை இலைகளின் விலையும் உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி

நாட்டு வாழை இலைக்கட்டு ஒன்று 700 ரூபாய்க்கும், கதளிவாழை இலைக்கட்டு 500 ரூபாய்க்கும் விற்கப்பட்டது என்று கூறினார்.

தற்போது அனைத்து பகுதிகளிலும் கோடை வெயில் வெளுத்து வாங்குவதால் தமிழகம் மட்டுமின்றி கேரளா போன்ற பகுதிகளிலும் பழரசம் வியாபாரம் சூடுபிடித்துள்ளது. இந்த பழரசத்திற்கு முக்கிய தேவையாக வாழைப்பழம் உள்ளது. கதளி, சக்கை போன்ற வாழைப்பழங்கள் பழரச தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் மேற்கண்ட வாழைத்தார்களின் விலையும் அதிகரித்துள்ளது. தூத்துக்குடி மார்க்கெட்டில் கதளி வாழைத்தார் 180 ரூபாய்க்கும், சக்கை வாழைத்தார் 120 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுதவிர ஏத்த வாழைத்தார் 150 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி தார் 160 ரூபாய்க்கும், பச்சை தார் 140 ரூபாய்க்கும், செவ்வாழை தார் 400 ரூபாய்க்கும், ரஸ்தாளி தார் 200 ரூபாய்க்கும் நேற்று விற்கப்பட்டது. இங்கிருந்து வாழைத்தார்கள் பெரும்பாலும் மதுரை, திண்டுக்கல், பழனி, தாராபுரம் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தூத்துக்குடி மார்க்கெட்டிற்கு தினசரி சராசரியாக 4 ஆயிரம் வாழைத்தார்கள் வரை விற்பனைக்காக கொண்டு வரப்படும். அண்மையில் வீசிய சூறாவளி காற்றால் பெரும்பாலாலன இடங்களில் விளைச்சலுக்கு தயாராக இருந்த வாழைத்தார்கள் சேதமடைந்ததால், மார்க்கெட்டிற்கு சுமார் 3 ஆயிரம் தார்கள் வரை விற்பனைக்காக வருகிறது. இதனால் தான் வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளதாக வாழை வியாபாரிகள் தெரிவித்தனர். அடுத்தாண்டு வரையிலும் இந்த விலை உயர்வு நீடிக்கும் என்றும் வியாபாரிகள் சிலர் கூறினார்.

**விவசாய தொழிலாளர்களுக்கு ரூ.446 கோடி உதவி தொகை : நலவாரிய தலைவர் தகவல்**

தென்காசி : 'தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நலவாரியம் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் பயனாளிகளுக்கு 446 கோடியே 27 லட்சத்து 32 ஆயிரத்து 762 ரூபாய் உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது' என நலவாரிய தலைவர் ராமலிங்கம் கூறினார்.

தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள், விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006 செயல்படுத்தும் பொருட்டு அமைக்கப்பட்ட விவசாய தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் ராமலிங்கம் நெல்லை மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்துதல் தொடர்பான ஆய்வு நடத்தினார். இந்த ஆய்வு கூட்டம் குற்றாலத்தில் நடந்தது.

மாவட்ட கலெக்டர் ஜெயராமன், நலவாரிய துணைத் தலைவர் செல்லமுத்து, மாவட்ட வருவாய் அலுவலர் ரமணசரஸ்வதி, சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை கலெக்டர் சுதர்சன், சேரன்மகாதேவி சப்-கலெக்டர் வீரராகவராவ், ஆர்.டி.ஓ.கள் மூர்த்தி, தமிழ்செல்வி, பி.ஆர்.ஓ.ரவீந்திரன், ஏ.பி.ஆர்.ஓ. நவாஸ்கான் மற்றும் தாசில்தார்கள், சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார்கள், கல்லூரி கல்வி துறை அலுவலர், முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், சுகாதார துணை இணை இயக்குநர், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நலவாரிய தலைவர் ராமலிங்கம் பேசும் போது, "தமிழகத்தில் 23 மாவட்டங்களில் நலவாரிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தியுள்ளேன். 24வது மாவட்டமாக நெல்லை மாவட்டத்தில் ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்ற வாரியங்களை விட விவசாய தொழிலாளர்கள் நலவாரியம் முக்கியத்துவம் பெற்றதாக இருக்கிறது. இதனை வருவாய் துறையினர் கூடுதலாக கவனித்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் குறைபாடுகள் இருந்தால் அவற்றை கண்டறிந்து நிவர்த்தி செய்வதுதான் முக்கியம். சலுகைகள் ஏதும் வேண்டும் என்றாலும் கேளுங்கள். திட்டம் செயல்பாடுகள் பற்றி கூறுங்கள். இத்திட்டத்தில் புதிய உறுப்பினர்களை சேர்க்க முனைப்பு காட்ட வேண்டும்" என்றார்.

சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார்கள் தங்கள் பகுதியில் விவசாய தொழிலாளர் நலவாரியத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள், உறுப்பினராக விண்ணப்பம் செய்திருப்பவர்கள், அடையாள அட்டை வழங்கப்பட்டவர்கள், நிதியுதவி பெற்றவர்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை கூறினர். மேலும் தங்களுக்கு அரசு ஜீப் வழங்க வேண்டும் என்றும், அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்றும் கூறினர்.

இத்திட்ட செயல்பாடுகள் குறித்து நலவாரிய தலைவர் ராமலிங்கம் நிருபர்களிடம் கூறியதாவது:"தமிழகத்தில் விவசாய தொழிலாளர்கள் நலவாரியம் 22.12.2006ல் துவக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் 75 லட்சத்து 73 ஆயிரத்து 649 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு 1 கோடியே 73 லட்சத்து 761 உறுப்பினர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

இதில் உறுப்பினர் திருமணம், உறுப்பினர்களின் குழந்தைகள் திருமணம், முதியோர் உதவி தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு, விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு, கல்வி உதவி, மகப்பேறு உள்ளிட்டவைகளில் 5 லட்சத்து 41 ஆயிரத்து 212 பயனாளிகளுக்கு 446 கோடியே 27 லட்சத்து 32 ஆயிரத்து 762 ரூபாய் உதவி தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் 21 ஆயிரத்து 934 பயனாளிகளுக்கு 13 கோடியே 37 லட்சத்து 18 ஆயிரத்து 730 ரூபாய் உதவி தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் இத்திட்டத்தின் செயல்பாட்டிற்காக 152 கோடி ரூபாய் நிதி ஒதக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு தேவைப்பட்டால் அதனை வழங்க முதல்வர் கருணாநிதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

முதல்வர் கருணாநிதி விவசாய மக்களின் நலனை கருதி அனைத்து பிரிவு மக்களும் பயனடையும் நோக்கத்தினை கருத்தில் கொண்டு மலை தோட்ட பயிர் செய்யும் விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம் என்று தெரிவித்துள்ளார். இதன் பேரில் நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி போன்ற மாட்டங்களில் பல ஆயிரக்கணக்கான தோட்ட தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு பெற்று நலத்திட்ட உதவிகள் பெற்று வருகின்றனர்.

உறுப்பினர்கள் பதிவினை புதுப்பிக்கும் காலம் மூன்று ஆண்டு காலமாக நீடிக்கப்பட்டுள்ளது. முதல்வரின் தொலை நோக்கு பார்வையின் கீழ் தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியில் புரட்சி ஏற்படும் நோக்கில் நவீன தொழில் நுட்ப விவசாய கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பதிவு பெற்ற விவசாய தொழிலாளர் இளைஞர்களுக்கு விவசாய துறை மூலம் விவசாய தொழில் நுட்ப கருவிகளை இயக்குவதற்கு ஒரு மாவட்டத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு அரசின் ஆணையை எதிர்நோக்கி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. பயிற்சி அளிக்கப்படும் விவசாய தொழிலாளர்களுக்கு ஒரு ஊக்கத் தொகையை வாரியத்தின் நிதியிலிருந்து வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் 3 லட்சத்து 5 ஆயிரத்து 80 குடும்ப அடையாள அட்டைகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு 6 லட்சத்து 3 ஆயிரத்து 553 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் விடுபட்ட அனைத்து தகுதியுள்ள உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட கலெக்டர் தலைமையில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்" என்று விவசாய தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் ராமலிங்கம் கூறினார்.

**விதைப் பண்ணைகளை வேளாண் அதிகாரி ஆய்வு**

புளியங்குடி : சிவகிரி பகுதியில் உளுந்து விதைப் பண்ணைகளை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் ஆய்வு செய்தார்.

சிவகிரி தாலுகா தேவிபட்டணம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 20 ஏக்கர் வம்பன் 3 உளுந்து சான்று விதைப் பண்ணைகளை மாவட்ட விசைச்சான்று உதவி இயக்குநர் பிரமநாயகம் ஆய்வு செய்தார். ஆய்வின் போது விதை உற்பத்தியாளர்களிடம் வம்பன் 3 உளுந்து பயரின் குணாதிசியங்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

'வம்பன் 3 உளுந்து பயிரில்லாத கலவன் செடிகளையும், மஞ்சள் தேமல் நோயால் பாதிக்கப்பட்ட செடிகளையும் உரிய காலத்தே அகற்றி வயல் தரம் காத்திட வேண்டும். நல்ல திரட்சியான பயறு விதைகள் கிடைத்திட 2 சதவீத டி.ஏ.பி. கரைசல் பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து இரண்டாவது முறையும் தெளித்திட வேண்டும். இவ்வாறு தனக்கு தேவையான பயறு விதைகளை நாமே உற்பத்தி செய்திட அனைத்து விவசாயிகளும் முன் வரவேண்டும்' என மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டார்.

சிந்தாமணி, சிங்கிலிப்பட்டி, சங்கரன்கோவில் பகுதியில் அமைந்துள்ள அரசு உரிமம் பெற்ற தனியார் விதை சுத்திகரிப்பு நிலையத்தை ஆய்வு செய்தார். ஆய்வின் போது விதை சுத்திகரிப்பு நிலைய உரிமையாளர்களிடம் கல், மண், தூசியில்லாத, நல்ல தரமான திரட்சியான விதைகள் கிடைக்க தக்க வகையில் சுத்தம் செய்து விதை பரிசோதனை செய்து விதை தரம் காத்திட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். இதற்கான ஏற்பாடுகளை விதைச்சான்று அலுவலர் வீரபுத்திரன், அசோகன், உதவி விதை அலுவலர் முருகன் செய்திருந்தனர்.

**விவசாய தொழிலாளர்களுக்கு ரூ.37 லட்சம் நலத்திட்ட உதவி வழங்கல்**

தென்காசி : குற்றாலத்தில் நடந்த விழாவில் நெல்லை மாவட்டத்தை சேர்ந்த 429 குடும்பங்களுக்கு விவசாய தொழிலாளர்கள் நலவாரியம் மூலம் 36 லட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாய் நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நலவாரியத்தில் நெல்லை மாவட்டத்தில் உறுப்பினர்களாக இருக்கும் 429 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா குற்றாலம் கலைவாணர் கலையரங்கில் நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் ஜெயராமன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் ரமணசரஸ்வதி வரவேற்றார்.

விபத்தில் மரணமடைந்த உறுப்பினர்களின் 7 குடும்பங்களுக்கு தலா 1 லட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபாய் வீதமும், இயற்கை மரணமடைந்த உறுப்பினர்களின் 142 குடும்பங்களுக்கு தலா 12 ஆயிரத்து 500 ரூபாய் வீதமும், ஆண், பெண் திருமணத்திற்கு முறையே 3 ஆயிரம், 5 ஆயிரம் வீதமும் மொத்தம் 429 குடும்பங்களுக்கு 36 லட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாய் காசோலைகளை நலவாரிய தலைவர் ராமலிங்கம் வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசும் போது, "ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி அவற்றை முதல்வர் கருணாநிதி செயல்படுத்தி வருகிறார். நெல்லை மாவட்டத்தில் முதியோர் உதவி தொகைக்கு கலெக்டர் உத்தரவிட்ட மறுநாளே பயனாளிகளுக்கு கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த வழிமுறையை அனைத்து மாவட்டங்களிலும் பின்பற்றி அறிவுறுத்தப்படும்.

தமிழகத்தில் அடிப்படை கட்டுமான பணிகளை முதல்வர் கருணாநிதி தீவிரமாக செயல்படுத்தி வருகிறார். இதனால் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் ஆட்சியாக தி.மு.க. ஆட்சி திகழ்கிறது. தமிழகத்தின் வரலாறாக கருணாநிதி வரலாறு அமையும்" என்றார்.

---

நிகழ்ச்சிகளை பி.ஆர்.ஓ.ரவீந்திரன் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் நலவாரிய துணைத் தலைவர் செல்லமுத்து, மாவட்ட சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை கலெக்டர் சுதர்சன், சேரன்மகாதேவி சப்-கலெக்டர் வீரராகவராவ், தென்காசி ஆர்.டி.ஓ.மூர்த்தி, தாசில்தார் பரமசிவன், குற்றாலம் டவுன் பஞ்.,துணைத் தலைவர் ராமையா, ஏ.பி.ஆர்.ஓ.நவாஸ்கான் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கலப்படமான கடலை மாவு விற்பனை ரூ.9 ஆயிரம் அபராதம் விதிப்பு : நெல்லை கோர்ட் தீர்ப்பு**

திருநெல்வேலி : நெல்லையில் கலப்படமான கடலை மாவு விற்பனை செய்தவர், தயாரிப்பாளருக்கு ரூ.9 ஆயிரம் அபராதமும், கோர்ட் கலையும் வரை தண்டனையும் விதிக்கப்பட்டது.

நெல்லை மாநகராட்சி கமிஷனர் பாஸ்கரன் உத்தரவின் பேரில் சுகாதார அதிகாரி கலுசிவலிங்கம் ஆலோசனையின் பேரில் உணவு ஆய்வாளர் காளிமுத்து, மேலப்பாளையம் ரெட்டியார்பட்டி ரோட்டிலுள்ள பலசரக்கு கடையை ஆய்வு செய்து, விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கடலை மாவு பாக்கெட்டுகளை சந்தேகத்தின் பேரில் உணவு மாதிரியாக எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பிவைத்தார். இதில் அதில் கலப்படம் இருப்பதும், உணவு கலப்பட தடை விதிகளுக்கு முறணாக பாக்கெட் செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து கலப்படமான கடலை மாவு விற்பனை செய்த கடையின் உரிமையாளர் நவமணி மீதும், அதை தயாரித்த மதுரை கம்பெனி மீதும் வழக்கு தொடர அனுமதி கேட்டு சென்னை உணவு கலப்பட தடைச் சட்ட இணை இயக்குனர் கண்ணனுக்கு பரிந்துரை செய்தார். பரிந்துரையின் படி கலப்படமான கடலை மாவு விற்பனையாளர், தயாரிப்பாளர் மீது வழக்கு தொடர நெல்லை ஜே.எம்.5 கோர்ட்டில் மாநகராட்சி வழக்கு தொடரப்பட்டது. வழக்கை நீதிபதி ஹேமா, விற்பனையாளர், தயாரிப்பாளர் ஆகியோருக்கு ரூ.9 ஆயிரம் அபராதமும், கோர்ட் கலையும் வரை தண்டனையும் வழங்கினார்

**வன விலங்குகளால் பயிர் பாதிப்பு சான்று பெற அலைக்கழிப்பு : நஷ்டஈடு பெற விரும்பும் விவசாயிகள் வேதனை**

ஸ்ரீவில்லிபுத்தூர் : வனவிலங்குகளால் ஏற்பட்ட பயிர் பாதிப்பு சான்றிதழ் வழங்க வருவாய்த்துறையினரால் அலைக்கழிக்கப்படுவதால் விவசாயிகள் வேதனையடைந்து வருகின்றனர்.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியையொட்டியுள்ள ஸ்ரீவி., வத்திராயிருப்பு, ராஜபாளையம் வனப்பகுதியில் ஏராளமான மான், யானை, காட்டு மாடு, காட்டு பன்றிகள், முயல் உட்பட ஏராளமான விலங்குகள் உள்ளன. மழை இல்லாததால் காடுகளை விட்டு இறங்கி வனப்பகுதியையொட்டி விளைநிலங்களில் புகுந்து விவசாய பயிர்களை நாசம் செய்து வருகின்றன. இதற்கு விவசாயிகளுக்கு நஷ்டஈடாக வனத்துறை சார்பில் 15 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. இத்தொகையை பெற பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களது நிலம், பயிர் சேதம் குறித்து வருவாய்த்துறையினரிடம் சான்று, பாதிக்கப்பட்ட பயிரின் தன்மையை பொறுத்து வேளாண் அல்லது தோட்டக்கலைத்துறை அலுவலரிடம் சேத மதிப்பு சான்று பெற்று வனத்துறையிடம் விண்ணப்பிக்க வேண்டும். வனத்துறையினர் பாதிக்கப்பட்ட விளைநிலத்தை பார்வையிட்டு நஷ்டஈடு வழங்குவர்.

ஊழியர் பற்றாக்குறை, விடுப்பு, வெளியூர் பணி என பலகாரணங்களை வருவாய்த்துறையினர் கூறுகின்றனர். இதனால் அத்துறையிடமிருந்து சான்று பெறுவதற்காக விவசாயிகள் பல நாட்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். இதனால் பல விவசாயிகள் பயிர் பாதித்தாலும் நஷ்டஈடு பெறுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. உடனடி நஷ்டஈடு கிடைக்க வழி வகை செய்ய வேண்டும்.

**இளநீர் விற்பனைக்கு வியாபாரிகள் படையெடுப்பு: தளி சுற்றுப்பகுதிகளில் தேடுதல் வேட்டை**

உடுமலை : கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்க இளநீர் தேவை அதிகரித்துள்ளதால், தளி மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களிலுள்ள தோட்டங்களுக்கு இளநீர் கொள்முதல் செய்ய வியாபாரிகள் படையெடுத்து வருகின்றனர்.

உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி சென்னை உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் தற்போது அதிகளவு வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், போதிய கோடை மழையில்லாததால், வெயில் உக்கிரத்திற்கு தாக்குபிடிக்க முடியாமல் பொதுமக்கள் திண்டாடி வருகின்றனர். கோடையின் தாக்கத்தை தணிக்க இளநீர், தர்பூசணி, வெல்லரி உள்ளிட்ட குளிர்பான பொருட்களை நாடிச்செல்வது வாடிக்கையாகியுள்ளது.இதனால், இளநீர் உள்ளிட்ட குளிர்பான பொருட்களின் விற்பனையும் சூடுபிடித்துள்ளது. குறிப்பாக, இளநீர் அதிகளவு மக்கள் விரும்புவதால், விலையும் அதிகரித்தது. சென்னை உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு வெப்பத்தின் தாக்கத்தை தணிக்க இளநீர் கொள்முதல் செய்ய உடுமலை அடுத்துள்ள தளி மற்றும் சுற்றுப்பகுதிகளுக்கு படையெடுக்கத்துவங்கியுள்ளனர். இதனால், இளநீர் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது.

தளி பகுதி தென்னை விவசாயிகள் கூறியதாவது: இந்தாண்டு வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், இளநீர் தேவை அதிகரித்துள்ளது. வீரிய ஓட்டு ரக இளநீருக்கு அதிகளவில் மவுசு காணப்படுகிறது. இதனால், தோட்டங்களிலிருந்து வியாபாரிகள் 9ரூபாய் முதல் 11 ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். கொள்முதல் செய்யப்படும் இளநீர் உள்ளூர் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களில் ஆங்காங்கே கடைகளும், இருசக்கரவாகனங்கள் மூலமாகவும் வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். சென்னை உள்ளிட்ட பகுதிகளில் கோடை வெயில் அதிகளவு உள்ளதால், அப்பகுதியை சேர்ந்த வியாபாரிகள் முன்பை விட தற்போது அதிகளவு வந்து இளநீர் கொள்முதல் செய்வதற்காக தளி மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களுக்கு அதிகளவு படையெடுத்து வருகின்றனர். வீரிய ஒட்டுரக இளநீர் மட்டுமின்றி, நாட்டு ரக இளநீரும் கொள்முதல் செய்கின்றனர். நாட்டு ரக இளநீர் ஆறுரூபாய் 50 பைசாவிற்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தளியிலிருந்து லாரி மூலம் கொள்முதல் செய்யப்படும் இளநீர் சென்னைக்கு எடுத்து செல்லப்பட்டு, 30 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு தென்னை விவசாயிகள் கூறினர்.

**அரசு மானியத்தில் தீவனம் வெட்டும் இயந்திரம் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க கோரிக்கை**

பல்லடம் : 'பால் உற்பத்தியாளர்களுக்கு, தீவனத்தை வெட்டிக்கொடுக்கும் மின் மோட்டார் பொருத்தப்பட்ட, தீவனம் வெட்டும் இயந்திரங்களை, 75 சதவீத மானியத்தில் அரசு வழங்க வேண்டும்' என, பால் உற்பத்தியாளர் நலச்சங்கம் கோரிக்கை விடுத் துள்ளது. கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் நலச்சங்க தலைவர் பாலச் சந்தர், காப்பாளர் ராஜகோபால் ஆகியோர் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு: பசும்பாலின் கொள்முதல் விலையை லிட்டருக்கு 20 ரூபாயாகவும், எருமைப்பாலை லிட்டருக்கு 30 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க வேண்டும். ஆவின் கறவை மாடுகள் இலவச காப்பீட்டு திட்டத்தை மாவட்ட ஒன்றியங்களே செயல்படுத்த வேண்டும். சங்கங்களுக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு ஒரு கிலோ கலப்பு தீவனத்துக்கு இரண்டு ரூபாய் வரை அரசு மானியம் வழங்கி, பால் உற்பத்தியை ஊக்கப்படுத்த வேண்டும்.

கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் நல்ல லாபம் ஈட்டி வருகிறது. நடப்பாண்டில் 20 கோடி ரூபாய் வரை உபரித்தொகை இருக் கும் என்ற நிலையில், பால் உற்பத்தியாளர்களுக்கு இந்தாண்டும் கூடுதலாக லிட்டருக்கு 1.50 ரூபாய் வழங்க, கோவை ஆவின் நிர்வாகத்துக்கு அனுமதி அளிக்க வேண்டும். நீண்ட நாட்களாக, கிராம பால் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்து வரும் பணி ௗளர்களை பணி நிரந்தரம் செய்து ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.தரமிக்க பாலை உற்பத்தி செய்வது மற்றும் கொள்முதல் செய்வதை ஊக்கப்படுத்தும் விதமாக, பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 20 காசு, செயலாளர், உதவியாளர் களுக்கு லிட்டருக்கு 10 காசு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த

வேண்டும். மின் மோட்டார் பொருத்தப்பட்ட தீவனம் வெட்டும் இயந்திரங்களை, பால் உற்பத்தியாளர்களுக்கு 75 சதவீத மானியத்தில் அரசு வழங்க வேண்டும்.

அதிநவீன பால் பரிசோதனை கருவி வழங்க வேண்டும். தினமும் 1,000 லிட்டருக்கு மேல் பால் கொள்முதல் செய்யும் சங்கங்களுக்கு கம்ப்யூட்டர் மற்றும் பிரின்டர் வழங்க வேண்டும். கோவை மாவட்டத்தில் எருமை மாடு வளர்ப்பு தொழில் கட்டுப்படியாகாததால், கறவை மாடுகளை பசு மாடுகளாகவே வழங்க வேண் டும். ஒவ்வொரு வாரமும் அனைத்து கிராம சங்கங்களுக்கும் கால்நடை மருத்துவர் சென்று கால்நடை களுக்கு இலவச மருத்துவ வசதி அளிக்க வேண்டும். இவ்வாறு, அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

---

தினத் தந்தி

## *வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் பருத்தி பயன்பாடு 4 சதவீதம் உயரும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்– செப்டம்பர்), நம் நாட்டில் பருத்தி பயன்பாடு 4 சதவீதம் அதிகரித்து 2.01 கோடி பொதிகளாக (ஒரு பொதி 170 கிலோ) உயரும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.*

*ஜவுளி தேவைப்பாடு*

*உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் ஜவுளி ரகங்களுக்கான தேவைப்பாடு அதிகரித்து வருவதே இதற்கு முக்கிய காரணமாகும். நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் இந்தியாவில் பருத்தி பயன்பாடு 1.92 கோடி பொதிகளாக இருக்கும் என்றும் அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. இது, சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தை காட்டிலும் 7 சதவீதம் அதிகமாகும். பருத்தி விலை உயர்ந்து வரும் நிலையிலும், பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய ஜவுளித் துறையில் பருத்தி உற்பத்தி துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பருத்தி உற்பத்தி, பயன்பாடு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போன்ற அனைத்து பிரிவுகளிலும் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள் நேரடியாக ஜவுளி துறையை பாதிக்கிறது. இந்திய ஜவுளித் துறை மற்றும் பருத்தி துறை அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.*

*பருத்தி சாகுபடி*

*பருத்தி சாகுபடி, வர்த்தகம் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய அனைத்துப் பிரிவுகளிலுமாக இத்துறை சுமார் 5 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு பல்வேறு தயாரிப்புகளை அளிப்பதில் நம் நாடு உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.*

*மேலும் சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 17 சதவீதமாக உள்ளது. நம் நாட்டில் ஏறக்குறைய 90 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில்*

பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. நாட்டின் உற்பத்தி செய்யப்படும் ஜவளி ரகங்களில் பருத்தியின் பங்களிப்பு சுமார் 45 சதவீதம் என்ற அளவில் இருந்து வருகிறது.